**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.102/2021**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஒச்சம்மாள்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பால்சாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது உச்சப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும் தேதி சரியாக ஞாபகம் இல்லை. இரவு 11.00 மணிக்கு மேல் இருக்கும். நான் மட்டும் தனியாக வீட்டில் இருந்த போது எனது செயினை அறுத்தார்கள். இரவு நேரம் என்பதால் யார் என்று அடையாளம் தெரியவில்லை. சம்பவம் தொடர்பாக சிந்துபட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகாரை எனது மகன் அழகுராஜா எழுதினார். எனது செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் பெற்றுக் கொண்டதாகும். **அது சா.பொ..1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள மனுவில் Informant எனும் இடத்தில் உள்ள

கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரரா என்றால் எங்கள் வீட்டில் இருந்து எதிரியின் வீடு கொஞ்சம் தூரத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் சொல்ல சொல்ல தான் எனது மகன் அழகுராஜா எழுதினார் என்றால் சரிதான். எனது புகாரில் கடந்த 04.11.2020ம் தேதி இரவு 11.30 மணியளவில் நான் என் ஓட்டு வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது எனது கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை ஆஜர் எதிரி ராஜ்மோகன் அறுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி ராஜ்மோகன் எனது தங்க சங்கிலியை அறுக்கும் போது நான் சத்தம் போட்டேன் என்றாலும் ஆஜர் எதிரி எனது வாயை பொத்திவிட்டார் என்றாலும் சரிதான். வாயை பொத்தியதுடன் ஆஜர் எதிரி எனது முகத்தில் ஓங்கி குத்தினார் என்றால் சரிதான். அதில் எனக்கு என்ன காயம் ஏற்பட்டது என்றால் எனது கண் அருகே காயம் ஏற்பட்டது. இரத்தம் வந்தது. ஆஜர் எதிரி தங்க சங்கிலியை அறுத்துக் கொண்டு எதன் வழியாக ஓடினார் என்றால் கதவை திறந்து வாசல் வழியாக தான் ஓடினார். அதன் பிறகு நான் என்ன செய்தேன் என்றால் அதன் பின்பு பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் இருளப்பன், போன்றோர் வந்தார்கள். அவர்களிடம் நடந்த சம்பவத்தை சொன்னேன். எனது மகன் அழகுராஜா நாகமலைபுதுக்கோட்டையில் இருந்ததால் அவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்பு எனது மகன் அழகுராஜா வந்த பின்பு தான் சிந்துபட்டி காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அருகே இருந்த திரவியம் மருத்துவமனையில் சிகிச்சை பார்த்துக் கொண்டேன். சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்பு எதிரி எனது வீட்டின் பக்கம் நோட்டம் விட்டாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்தது உண்மை என்றும் புகாரில் உண்மை சம்பவம் குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்

என்றும் போலிசார் விசாரணையிலும் சம்பவம் குறித்து உண்மையை சொல்லியுள்ளேன் என்றும் தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியாலும் எதிரி எனது ஊர்க்காரர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.102/2021**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகுராஜா | Caste | : |
| Father 's Name / Husband Name | : பால்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது நாகமலைக்புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை RFSL ல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2020ம் தேதி இரவு 12.00 மணிக்கு எனது அம்மா ஒச்சம்மாள் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னை ஒருவர் தாக்கிவிட்டு ஓடிவிட்டதாக சொன்னார். நான் உடனடியாக சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தேன். எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்திற்காக திரவியம் மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதல் உதவி சிகிச்சை அளிக்கபட்டது. பின்பு சம்பவம் தொடர்பாக சிந்துபட்டி காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவை எனது அம்மா சொல்ல சொல்ல நான் எழுதினேன். நகையை அறுத்து சென்றுவிட்ட விபரம் தெரிந்தது. நீதிமன்றத்தில் மனு செய்து அறுத்து சென்ற நகையை பெற்றுக் கொண்டோம். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

நாங்கள் ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவை நான் எழுதியுள்ள நிலையில் புகார் மனுவில் கடந்த 04.11.2020ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் நான் ஓட்டு வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது எனது கழுத்தில் இருந்த 4 பவுன் தங்க சங்கிலி என் கழுத்தை இறுக்குவது போல் போன்ற நான் கண் விழித்து பார்த்த போது எங்கள் ஊரைச் சார்ந்த செல்வம் மகன் ராஜ்மோகன் என்பவர் என் கழுத்தில் இருந்த செயினை அத்தான் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவை எனது அம்மா ஒச்சம்மாள் சொல்ல சொல்ல நான் எழுதினேன் என்றால் சரிதான். புகாரிலும் போலிசார் விசாரணையிலும் ஆஜர் எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதை சரியாக கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டபடியாலும் அவர் எனது ஊர்க்காரரர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை